
மேலும் இலவச பிரதிகளுக்கும்,
இலவச பத்திரிகை பிரதிகளுக்கும்
எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.




இந்தியாவில் இலவச பிரதிக்குத்
தொடர்பு முகவரி :
**The Christadelphians,**
P.O. Box 4237
Bangalore - 560042. INDIA.

ஸ்ரீலங்காவில் இலவச பிரதிக்குத்
தொடர்பு முகவரி :
**The Christadelphians,**
P.O. Box 60,
Negombo - 11500,
SRI LANKA
Email : slcbm2@slnet.lk

# புது சிருஷ்டி

சத்தியத்தையும் அறிவீர்கள். சத்தியம் உங்களை விடுதலையாக்கும்

இதழ் 27

- ஜெபம்
- எலியா
- வண்டியை ஓட்டுங்கப்பா
- வேதாகம சத்தியத்திற்குச் சான்று

எகிப்து பற்றி வேதாகமம்
முன்னறிவித்தது

## கிறிஸ்டடெல்ஃபியர்கள் யார் ?

கிறிஸ்டடெல்ஃபியன்ஸ் (Christadelphians) என்ற பதம் கிரேக்க மூலமொழிகளாகிய Christ மற்றும் adelphos என்ற பதங்களிலிருந்து உருவானது. இதன் அர்த்தம் "கிறிஸ்துவில் சகோதரர்" என்பதாகும். கிறிஸ்டடெல்ஃபியன்ஸ் என்ற உலகளாவிய கிறிஸ்தவ சமுதாயம் 'வேதாகமத்தில் முழுமையாக நம்பிக்கை வைக்கிற' மக்கள் கூட்டமாகும். வேதவாக்கியங்களெல்லாம் தேவனால் அருளப்பட்டவை என்று உறுதியாக நம்புகிறார்கள்.

நாங்கள், தேவனுடைய (ஒரே பேறான) குமாரனாகிய இயேசு கிறிஸ்து வல்லமையோடு பூமிக்குத் திரும்பி வருவார் என்றும், அவர் வருத்தங்கள், அக்கிரமம், ஆக்கிரமிப்புகளை நீக்கி, தமது ஜனங்களுக்கு நியாயத்தையும், சமாதானத்தையும், நீதியையும் கொண்டு வருவார் என்றும் நம்புகிறோம்.

நாம் மரித்தாலும், மரித்தோரிலிருந்து எழும்பி, நியாயந்தீர்க்கப்படுவோம் என்று நம்புகிறோம். அத்துடன், இப்போது வாழும் வாழ்க்கையில் தன்னயமும் பொல்லாங்கும் நிறைந்து வாழ்ந்தவர்கள் நித்தியத்துக்கு வாழமுடியாமல் அழிக்கப்படுவார்கள். அதற்கு மாறாக, தேவனுடைய வார்த்தையை நம்பி கீழ்ப்படிந்து ஜீவித்தவர்கள் நித்தியமாக ஜீவித்திருப்பார்கள். மேலும் ஒவ்வொருவரின் வாழ்விலும் இரண்டு முக்கியமானவைகளை நிறைவேற்றியே ஆக வேண்டும் என்று விசுவாசிக்கிறோம். அவைகளில் (1) தேவனிடம் முழு இருதயத்துடன் அன்பு கூர வேண்டும். (2) உன்னைப் போல பிறரை நேசிக்க வேண்டும்.

ஒருங்கிணைப்பாளர் : லினஸ் டேனியேல்
Email : linus@choose2live.info
வேதத்தின் சத்தியத்தை கேளுங்கள்
http// www.choose2live.info/new_creation
இந்தியாவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :
**The Christadelphians,**
P.O. Box 4237
Bangalore - 560042. INDIA.
ஸ்ரீலங்காவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :
**The Christadelphians,**
P.O. Box 60,
Negombo - 11500,
SRI LANKA
Email : slcbm2@slnet.lk
Website: www.readthebible.lk

இந்த பத்திரிகையின் வாயிலாக, வேதவாக்கியங்களை வாசிக்க உங்களைத் தூண்டுவதே எங்கள் குறிக்கோள். இதிலுள்ள கட்டுரைகள் உங்களை ஆவிக்குரிய வளமூட்டி வளர்க்க உற்சாகப்படுத்தும் என நம்புகிறோம். நம்மை இரட்சிப்புக் கேற்ற ஞானமடையச் செய்வதால் வேதாகமத்தைத் தினமும் வாசிக்க உங்களை உற்சாகப்படுத்துகிறோம்.

இந்த பத்திரிகையில் காணப்படும் எல்லா கட்டுரைகளும் அனைத்துலக கிறிஸ்டடெல்ஃபிய வழிமுறை யிலிருந்து தெரிந்தெடுத்து மொழி பெயர்ப்பு செய்து பிரசுரமாகியுள்ளன.

**புது சிருஷ்டி பதிப்பாளர் குழு**

லினஸ் டேனியேல் : தலைமை ஒருங்கிணைப்பாளர்
ராஜபட்சம் ஆனந்தா : மொழிபெயர்ப்பு, பதிப்பு மற்றும் கணினி ஒருங்கிணைப்பாளர்
பவித்ரா : நிர்வாகம், உபப்பதிப்பாளர்

திருமதி கிலாடிஸ் சுகிர்தராஜ். சந்திர மோகன் மற்றும் திருமதி சாந்தி பவுல் அவர்களின் தமிழ் மொழிபெயர்ப்பு உதவிகளுக்காக சிறப்பான நன்றி கூறுகிறோம்.

*"இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால், புது சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின" (2. கொரிந்தியர் 5:17).*



# ஜெபம்

நாம் தேவனிடம் பேசுவதை அவர் விரும்புகிறார். எனவே ஜெபம் என்பது ஒரு சீஷனுடைய வாழ்க்கையில் தினமும் இன்றியமையாதது. இந்த அத்தியாயத்தில் ஜெபம் என்றால் என்ன என்பதையும், உங்கள் ஜெபத்தை எவ்வாறு கருத்து மிகுந்ததாகவும் வல்லமை நிறைந்ததாகவும் ஆக்கிக்கொள்ளக் கூடும் என்று பார்ப்போம்.

**கவன ஈர்ப்பு : 1 ராஜாக்கள் 18:36-46**

எலியா தேவனுடைய மனிதனாக - ஆண்டவரிடம் ஜெபிக்கிறவனாக, அவரைச் சேவிப்பவனாக, அவருக்குக் கீழ்ப்படிகிறவனாக - இருந்தான். எலியா மிகுந்த ஊக்கத்துடனே ஜெபம் பண்ணினான். கர்த்தர் அவன் ஜெபத்துக்குப் பதிலளித்து வானத்திலிருந்து அக்கினியை அனுப்பினார். பின்பு, எலியா ஜெபிக்கும் படி தனது முழங்கால்களை முடக்கினபோது, மறுபடியும் அவன் ஜெபத்தைக் கர்த்தர் கேட்டு, பஞ்சத்தினால் வறண்ட தேசத்தின் மேல் மழை பெய்யச் செய்தார்.

**நாம் ஜெபித்தே ஆக வேண்டும்.**
*எரேமியா 33:3*
*பிலிப்பியர் 4:6*
*எபேசியர் 6:18*
*லூக்கா 18:1*



1. இந்த வேதபகுதியில் எந்த இரண்டு வகையான ஜெபம் குறிக்கப் பட்டுள்ளது ?
2. ஒவ்வொரு வகையிலும், எலியா ஜெபித்தபோது இருந்த சரீர நிலை எவ்வாறு இருந்தது ? சரீரம் வைத்திருக்கிற குறிப்பிட்ட நிலைஜெபத்துக்கு அவசியமா ?
3. எலியா மழைக்காகத் தான் செய்த ஜெபம் கேட்கப்படும் என்று நிச்சயமாக நம்பினான். அதனாலேயே மழைமேகத்தைப் பார்க்கும்படி மீண்டும் மீண்டும் தன் வேலைக்காரனை அனுப்பினான், விசுவாசிகள் தாங்கள் ஜெபிக்குமுன் தங்கள் ஜெபம் கேட்கப்பட வேண்டும் என்று எதிர்பார்ப்பது அவசியமா ? (மாற்கு 11:24யை வாசித்துப் பார்)

## ஜெப ஜீவியத்தை உயிரடையச் செய்வது

உங்கள் எண்ணங்களையும் உணர்வுகளையும் தேவனிடம் வார்த்தை, பாடல், ராகம் மற்றும் தியானத்தின் மூலம் எடுத்துச் சொல்வதே ஜெபம் ஆகும். அது பரமபிதாவுடன் நாம் வைத்துள்ள உறவைப் பொருத்தது. எந்த உறவிலும் கருத்து

பரிமாற்றம் மிகவும் முக்கியமானது. அதற்குச் சில முயற்சிகளும் தேவை. அதற்கான முயற்சியை நீ எடுத்தால் ஜெபம் உயிரடையும் கர்த்தர் ஜெபத்தைக் கேட்பார். சரியான விதத்தில் நாம் தேவனோடு பேச உதவி செய்யக் கூடிய சில குறிப்புகள் இங்கே உண்டு:

- எந்த குறிப்பு முக்கியமோ அதைக் குறிப்பிட்டுப் பேசு சொல்லு
- நீ சொல்ல வேண்டியதை சிந்தித்துச் சொல்லு
- உண்மையாகப் பேசு. அது உண்மையாகும்.
- ஜெபத்தில் தன்னயமாக இராதே.
- நீ பேசுவதைவிட அவருடைய சத்தம் கேட்கமுயலு.
- தேவனோடு சம்பாஷித்தப்பின் அப்படியே நடக்கப் பழகு.

**பயிற்சி**

*அருகில் காணும் ஆறு குறிப்புகலைக் கவனி. உன் ஜெப ஜீவியத்துக்கு அது எப்படி பொருந்துகிறது? நீ தேவனோடு சம்பாஷனை செய்வதில் எந்த மூன்று காரியங்களில் முன்னேறலாம் என்று குறித்துவை.*

## எங்கே, ஏன் ஜெபிக்க வேண்டும்?

வேதாகம உதாரணங்களின் படி, நாம் எந்த இடத்திலும், எந்த நேரத்திலும், எந்தக் காரியத்துக்காகவும் ஜெபிக்க வேண்டும், நீ சரியான நோக்கத்துடன் கர்த்தரிடம் விண்ணப்பம் பண்ணினால், நீ எந்த இடத்தில் ஜெபிக்கிறாய் என்பது காரியமாக இராது. தேவனுக்கு வேண்டியதெல்லாம், நீ எதைக்குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறாய் என்பது தான்.

## சில பொருத்தமான வேதபகுதிகள்

| | |
|---|---|
| **ஜெபத்துக்குப் பதிலளிப்பது குறித்து தேவவாக்குத்தத்தம்:** | சங்கீதம் 34:15; எரேமியா 29:12-13; மல்கியா 3:16; மத்தேயு 7:7-11; யோவான் 14:13-14; 15:7, 16;16:23-24 1 யோவான் 5:14-15. |
| **ஜெபத்துக்காக ஒழுங்கான நேரம்:** | தானியேல் 6:10,13; சங்கீதம் 5:3;55:17; 62:18; லூக்கா 18:1; அப்போஸ்தலர் 10:9,30; எபேசியர் 6:18; பிலிப்பியர் 4:6-7; கொலோசெயர் 4:2 1தெசலோனிக்கேயர் 5:17 1தீமோத்தேயு 2:8. |
| **ஊக்கமான ஜெபத்துக்குத் தடைகள்:** | சங்கீதம் 66:18; நீதிமொழிகள் 15:8,29;28:9; எரேமியா 11:14; மாற்கு 11:25-26; 1 பேதுரு 3:7. |
| **ஜெபத்தில் உதவி:** | ரோமர் 8:26-27,34. |
| **வல்லமையான ஜெபம்:** | யாக்கோபு 5:13-16. |
| **ஜெபிக்க வேண்டியவைகள்:** | சங்கீதம் 34:1; 96:2; 145:1-3; மத்தேயு 5:44; லூக்கா 21:36; எபேசியர் 5:20; பிலிப்பியர் 1:3-11; 1 திமோத்தேயு 2:1-6; யாக்கோபு 1:5-8. |
| **ஜெபத்தைக் குறித்த இயேசுவின் போதனை:** | மத்தேயு 6:5-15; 18:19; 21:22; மாற்கு 11:24-25; லூக்கா 11:1-13; 18:1-14. |

2 இராஜாக்கள் 4:33
அப்போஸ்தலர் 10:9
நெகேமியா 2:4
தானியேல் 6:10,13
அப்போஸ்தலர் 10:30

- எலிசா வீட்டைத் தாழிட்டு உள்ளே ஜெபித்தான்.
- பேதுரு மொட்டை மாடியில் ஜெபித்தான்.
- நெகேமியா ராஜாவுக்குமுன் மனதில் (அமைதியாக) ஜெபித்தான்.
- தானியேல் எருசலேமுக்கு நேராகத் திரும்பி தினம் மூன்று முறை ஜெபித்தான்.
- கொர்நேலியு ஒன்பதாம் மணி வேளையில் ஜெபித்து வந்தான்.

நீ சரியாக ஜெபிக்க உனக்கு அதிகநேரம் அவசியமில்லை. எனினும் தேவனோடு சரியாக உறவாச தினமும் சிறிது நேரம் ஒழுங்காக ஒதுக்குவது நல்லது. தினமும் ஜெபிக்கும் படி நேரம் ஒதுக்கிவை. அந்த வேளையில் வீட்டில் யாருமே தடைசெய்யாத படி இருக்கப் பார்த்து கொள். ஏனெனில் அது நீ தேவனோடு செலவிடும் பொன்னான நேரம். நீ ஜெபிக்கும் போது எந்த சரீர நிலை தேவனுக்கு முன்பாக மரியாதையாக இருக்கும்? என்பதைச் சிந்தித்துச் செயல்படு. எலியா தனது தலையை முழங்காலின்நடுவில் முடக்கி ஜெபித்தான். சாலோமோன் தன் கைகளை வானத்துக்கு நேராக உயர்த்தினான். தாவீது கர்த்தருடைய சமூகத்தில் அமர்ந்தான். நீ ஜெபிக்கும் போது எந்த நிலையில் உன் சரீரத்தை வைக்கிறாயோ அந்தப் படியே உன் ஜெபத்தின் வெளிப்பாடும் இருக்க வாய்ப்பு உண்டு. அடுத்த முறை நீ ஜெபிக்கும்போது எந்த ஜெப நிலையில் இருப்பாய் என்பதைச் சிந்தித்துப்பார். அது மேன்மையாக இருக்குமா? நண்பரோடு அல்லது குடும்பத்தாரோடு ஜெபிப்பது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். ஆரம்பத்தில், தனிப்பட்ட தேவைகளைப் பிறருடன் பகருவது சிரமமாகவே இருக்கும். ஆனால் அது சுலபமாக இருக்கும். உங்களது யோசனைகளையும் உணர்வுகளையும் (சில வேளைகளில் உங்களது வீழ்ச்சி அல்லது குறைகளையும்

- யாக்கோபு 5:16) பகருவதனால் உன்நண்பர்கள், அல்லது குடும்பத்தோடு நெருங்கிய ஆவிக்குரிய உறவுவைத்துக் கொள்ளக் கூடும். உங்களுக்குப் பிறர் ஆதாரவாக இருக்கவும் உற்சாகப்படுத்தவும் உதவியாக மாறும். மேலும் நீங்கள் ஜெபஜீவியத்தில் வேரூன்ற அது பயன்படும். உங்கள் ஜெப வாழ்க்கையில் நீங்கள் வளர வேண்டும் என்று எண்ணுகிறீர்களா? பிறருடன் சேர்ந்து ஜெபிக்கப் பழகுங்கள். ஆதித்திருச்சபை விசுவாசிகள் தங்களது புதுவாழ்வின் அடிப்படையாகக் கூடி ஜெபித்து வந்தனர்.

"அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் மிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்." (அப்போஸ்தலர் 2:42)

## நான் எதற்காக ஜெபிக்க வேண்டும்?

**இயேசு கூறினார்:**

*"கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும் தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள். தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும். ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக் கொள்ளுகிறான். தேடுகிறவன் கண்டடைகிறான். தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும். உங்களில் எந்த மனுஷனானாலும் தன்னிடத்தில் அப்பத்தைக் கேட்கிற தன் மகனுக்குக் கல்லைக் கொடுப்பானா? மீனைக் கேட்டால் அவனுக்குப் பாம்பைக் கொடுப்பானா? ஆகையால் பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும் போது, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா?"* (மத்தேயு 7:7-11)

*யோவான் 14:13,14*
*15:16; 16:23-24*
*1.யோவான் 5:14-15*
*காண்க*

தேவன் நமது பரமபிதா. அவர் ஒரு தகப்பன் தன் பிள்ளைகளைப் பார்ப்பது போல் நம்மைக் கவனிக்கிறார். மற்றொரு சந்தர்ப்பத்தில் இயேசு கூறினார்:

*"நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்."* (யோவான் 15:7) அவர் இந்த சத்தியத்தை மனதில் நன்றாகப் பதிக்க விரும்பினார். மூன்று முறை அவர் இதைத் திரும்பத் திரும்ப இரண்டு மூன்று மணி நேர வித்தியாசத்தில் கூறியுள்ளார். நாம் கேட்டுப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று அவர் விரும்புகிறார், அதை நாடி காத்திருக்கிறார். நமக்குப் பதில் கொடுப்பதில் அவருக்கு அலாதிபிரியம்.

*எபேசியர் 3:14-21*
*தானியேல் 6:10*
*அப்போஸ்தலர் 12:5*

ஆகவே நாம் எதற்காக ஜெபம் பண்ணவேண்டும் என்று ஆண்டவர் விரும்புகிறார்? கீழ்க்கண்ட உதாரணங்களை யோசித்துப்பார்:



- பவுல் பிறருடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்காக ஜெபித்தான் எபேசியர் 3:14-21
- தானியேல் தினமும் மூன்று தரம் கர்த்தரைத் துதித்தான். தானியேல் 6:10.
- சிறையிலிருந்த பேதுருவுக்காக விசுவாசிகள் ஜெபித்தனர். அப்போஸ்தலர் 12:5.
- இயேசு தமது சீஷர்களின் பாதுகாப்புக்காக ஜெபித்தார். யோவான். 17:11,15.
- பவுல் "தன் சரீரத்திலுள்ள முள்ளை நீக்கும்படி" வேண்டிக் கொண்டான். 2 கொரிந்தியர் 12:7-8.
- அன்னாள் ஒரு மகனுக்காக வேண்டிக் கொண்டாள். 1 சாமுவேல் 1:10-11.

*யோ. 17:11,15*
*2. கொரி 12:7-8*
*1. சாமுவேல்*

*நமது தேவைகளை கர்த்தர் அறிந்தாலும் ஏன் அநுதின தேவைக்காக ஜெபிக்கும்படி இயேசு கூறினார்?*

நாம் விரும்புகிற விதமாகவே தேவன் எப்போதும் செவி கொடுக்க மாட்டார். உதாரணமாக, தேவன் "பவுலின் சரீரத்திலிருந்து முள்ளை" எடுத்துப் போடவில்லை. சில வேளைகளில் நமக்கு வேண்டும் என்று நாம் நினைக்கும் காரியங்களைத் தேவன் அவசியமில்லை யென்று அப்புறப்படுத்துகிறார்.

இயேசு கார்த்தருடைய ஜெபத்தைத் தமது சீஷர்களுக்குப் போதித்து அவ்விதமாக ஜெபிக்கும்படி போதித்தார் (மத்தேயு 6:6-15). அது மிகவும் சாதாரணமாகவும், ரத்தின சுருக்கமாகவும் உள்ளது. அதில் துதியும், வேண்டுகோளும், அறிக்கையும், மன்னிப்பும் அடங்கியிருக்கிறது. நமது ஜெபத்தில் ஸ்தோத்திரத்தையும் முக்கிய பகுதியாக சேர்த்துக் கொள்ளலாம்.

தேவன் "இல்லை" என்று சொன்னால்

நீ ஒரு காரியத்துக்காக ஜெபித்து, தேவன் அதைக் கொடாதிருந்தால், அதற்காக மனந்தளர வேண்டாம். அல்லது தேவன் ஜெபத்தைக் கேட்டாரா என்று சந்தேகப்படவும் வேண்டாம். நீயே கீழ்க்கண்ட கேள்விகளைக் கொண்டு உன்னை ஆராய்ந்துபார்.

*ஒரு வேளை இதனாலேயா பவுலின் முள்ளைக் கர்த்தர் நீக்கவில்லை?*

1. நான் தவறானவைகளை ஆண்டவரிடம் கேட்கிறேனா? நாம் வேண்டி கொள்ளும் காரியம் "தேவ சித்தமாக இருந்தால்" அதைக் கொடுப்பேன். (1 யோவான் 5:14-15) என்று வாக்களித்திருக்கிறார். நாம் தேவனுடைய சித்தத்தின்படி எதையாவது கேட்கிறோமா என்று தீர்மானிப்பது கடினமான காரியம்தான். நாம் கடினமான சூழ்நிலையைக்

*எபிரேயர் 12:4-11*

*லூக்கா 18:1-8*

கடந்து செல்ல உதவிசெய்யும்படி தேவன் விரும்பலாம். அல்லது வேறு ஏதாவது அதைவிட நல்லதைக்காண அவர் விரும்பலாம்.

2. நான் அதற்காகத் தவறாமல் ஜெபிக்கிறேனா? நீ விடாப்பிடியாய், அதாவது ஒரு முறை அல்லது இருமுறை ஜெபித்து விட்டுவிடாமல், தொடர்ந்து ஜெபிக்க விரும்புகிறார். நீ கேட்பது வசனத்தின் படி அவசியம் என்றறிந்திருப்பாய் என்றால், குறிப்பிட்டு, தொடர்ச்சியாக, ஊக்கமாக ஜெபி.

   *“நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பலனுள்ளதாயிருக்கிறது”* (யாக்கோபு 5:16).

3. நான் ஏதாவது பாவத்தை உதாசினம் பண்ணுகிறேனா? மன்னிக்கப்படாத பாவம் ஜெபத்திற்குத் தடையாக இருக்கிறது. சங்கீதம் 66:18; 1 பேதுரு 3:17 வாசிக்கவும். தேவன் உன் ஜெபத்தைக் கேளாததற்குக் காரணம், உன்னில் உள்ள பாவத்தை ஒத்துக் கொள்ளாமலிருப்பதால் இருக்கலாம்.

*வேதாகமத்தில் நீண்ட நாட்களாக ஜெபம் கேட்கப் படாமல் இருந்ததற்கு உதாரணம் உண்டா? “ஆபிரகாம்”*

4. நான் பொறுமையாக இருக்கிறேனா? சில வேளைகளில் ஆண்டவர் பதிலளிக்க சில மாதங்கள் அல்லது வருடங்கள் ஆகலாம். ஏனெனில் அதற்கேற்ற தருணம் இன்னும் வரவில்லை, அல்லது இன்னும் காலம் நீடிக்கலாம்.

5. நான் கவனித்து கேட்கிறேனா? ஒரு வேளை ஆண்டவர் தரும் பதிலை நாம் கவனித்துக் கேட்கத் தவறுகிறோம். அதை நாம் அர்த்தம் பண்ணிக் கொள்வதில்லை.

6. நான் எனது கடமையைச் சரியாக நிறைவேற்றினேனா? அடிக்கடி தேவன் நமது பக்கத்திலிருந்து கிரியை எதிர்பாக்கிறார். உதாரணமாகத் தனது பரீட்சையில் தேறும்படி ஜெபிக்கிற ஒருவன் பாடம் படியாமல் இருப்பது கடமை தவறுவது ஆகும். நாம் நமது பங்கை நிறைவேற்றாமல் போனால், தேவன் தமது பங்கை நிறைவேற்றமுடியாது.

### பொருளடக்கம்

ஜெபம் என்பது ஒரு விசுவாசியின் கிறிஸ்தவ ஜீவியத்தில் ஞானஸ்நானம் பெறும் முன்பே ஆரம்பிக்க வேண்டிய முக்கிய பங்காகும்.

உனது எண்ணம் சரியாக இருந்தால், தேவன் அதற்குப் பதில் கொடுப்பார்.

தேவனுடைய வார்த்தை நம்மில் தங்கியிருக்க அனுமதித்தால், நாம் கேட்பதை அவர் தருவார் என்று நாம் நம்பலாம்.

உனது ஜெபத்தை இரத்தின சுருக்கமாகவும் குறிப்பாகவும் சொல்லிகேள். அதில் துதி, பாவ அறிக்கை, நன்றி மற்றும் வேண்டுதல்களைச் சேர்த்துக் கொள்.



# எலியா

சத்தியத்தை அறிவிக்கும் படியாக ஒவ்வொரு காலத்திலும் கடவுள் தமது தலைவர்களை கொண்டு பெரிய காரியங்களைச் செய்தார். அப்படிப்பட்டவர்களில் சிலர் - நேவா, ஆபிரகாம், மோசே தாவீது ஆவார்கள். இவர்கள் மரித்தாலும் அவர்களுடைய புகழ் அழியாமல் நீடித்து நிலைத்து நிற்கிறது. இன்றும் அவர்கள் சொன்னதும், செய்ததும், பெற்றதுமான தேவவாக்குத்தத்தங்கள் நமது இரட்சிப்புக்கு ஆதாரமாக உள்ளன.

அப்படிப்பட்டவர்களில் எலியா ஒருவன். அவன் இஸ்ரவேலின் தீர்க்கதரிசிகளில் மகா மேன்மையானவன். இஸ்ரவேல் ஜனத்தின் மதிகெட்ட நடத்தையினிமித்தம் அவர்கள் அனுபவித்த சங்கடமான காலத்தில் அவன் வலிமையாகத் தீமையைக் கண்டிக்கிறவனாக நிமிர்ந்து நின்றான். அவனுடைய நடத்தை இன்றும் நமக்கு ஏற்ற உதாரணமாகவும் முன்மாதிரியாகவும் உள்ளது.

எலியாவின் வாழ்க்கையை மூன்று கோணங்களிலிருந்து பார்க்கலாம். முதலாவதாக, அது விசுவாசத்துக்கும் தைரியத்துக்கும் நல்ல உதாரணம். இரண்டாவது, அது இயேசு கிறிஸ்துவின் ஊழியத்துக்கு ஒப்பாக விளங்குகிறது. மூன்றாவது, அது இன்னும் நிறைவேற வேண்டியவைகளைக் குறித்து தீர்க்கதரிசனமாக இருக்கிறது.

எலியா திடீரென்று வேதாகமத்தில் தோன்றுகிறான். அவனுடைய பெற்றோர்கள் யார் என்பது நமக்குத் தெரியாது. அவனுடைய பிள்ளைகளும் இல்லை. அவன் தோன்றும்போது எச்சரிப்பு இல்லாமல் எதிர்பாராமல் வருகிறான். அவன் எதற்கும் இணங்காமல் கடினமான வார்த்தைகளோடு செய்தியளித்துவிட்டு மாயமாய் மறைகிறான். அவன் தன்னைப்பற்றி, “யெகோவாவுக்கு முன் நிற்பவன்” என்று எஜமானின் வேலைகள் நிறைவேற்றும் அடிமையாகத் தன்னைப் பாவித்து பேசினான் (1 ராஜாக்கள் 17:1;18:15) அவன் மிருதுவாக நடக்கிறவன் அல்ல; மாம்சத்துக்கு அடிமையானவனும் அல்ல.

அதற்குப் பதிலாக ஒரு முரட்டுத்தனம், ஒரு தனிமை, ஒரு கடுமை, ஒரு கண்டிப்பு அவனிடம் காணப்படுகிறது. அது பிற தீர்க்கதரிசிகளிடம் காணப்படும் சாதுவான தன்மைக்கு எதிரிடையாக இருந்தது. அவன் சொந்த பூமி கீலேயாத் எகிப்து எல்லை ஒட்டிய மலைப் பிரதேசத்தைச் சார்ந்தது. ஒரு வகையில் அவனுடைய முரட்டு சுபாவத்துக்கும் அந்த கரடுமுரடான மலைப் பிரதேசத்துக்கும் சம்பந்தம் உள்ளதுபோல் இருந்தது. ஒரு எழுத்தாசிரியர் அதை இவ்வாறு குறிப்பிட்டார். “அவனுக்கும் அவன் பிரதேசத்துக்கும் சிறப்பான ஒற்றுமை இருந்தது. அது கண்டிப்பானதாகவும், அவாந்தரமாகவும், ராஜரீகமாகவும், ஒய்யாரமாகவும் பயங்கரமாகவும் இருந்தது.”

யோவான் ஸ்நானகனைப் போலவே, எலியாவும் ஒரு இடத்தில் சேர்ந்த மாத்திரத்தில், வித்தியாசமாகக் காணப்பட்டதால், தனித்து விளங்கினான். தன்னோடு வனாந்தரத்தையே பட்டணத்துக்குள் கொண்டு வந்தது போலிருந்தான். அவனுடைய தோற்றத்தின் சிறப்பு, சவரஞ் செய்யத நீண்டமுடி அவன் முதுகில் படர்ந்து, மார்பை மூடிக்கொள்ள கடாத்தோல் போர்த்தி அதன்மேல் இடுப்பில் கச்சை கட்டியிருந்தான். (2. இராஜாக்கள் 1:8). அவன் கொடுத்த தேவசெய்தி நேரடியாகத்தாக்குவதாயும், சவாலாகவும், வேகம் குறையாததாகவும் இருந்ததால் அதை யாராலும் அசட்டை பண்ண முடியவில்லை. அது எதிரியின் கடுங்கோபத்தை மூட்டி கடினமான எதிர்ப்பை வெளிப்படுத்தச் செய்தது.

அவனுடைய ஜீவிய சரித்திரம் வேதாகமத்தில் எழுதப்பட்டவிதம் ஒரு வீரசரித்திரம் போலிருக்கிறது. அது 1. இராஜாக்கள் 17ம் அதிகாரத்திலிருந்து 2. ராஜாக்கள் 2ம் அதிகாரம் வரை எழுதப்பட்டுள்ளது. பிலிப்பின் குடும்பம் மாலை வேதாகம வாசிப்பின்போது வேதவாசிப்பு பஞ்சாங்கத்தின் உதவியோடு வாசித்த பகுதியை விமர்சித்து வந்ததை நாமும் படித்தால் நமக்கு நல்லது. தீர்க்கதரிசியின் ஜீவியத்தில் நடந்த சம்பவங்களைத் தகப்பனோடு பிள்ளைகள் சேர்ந்து கலந்துரையாடி விமர்ச்சித்ததை நாமும் சேர்ந்து படிப்போம்.

## எலியா: இஸ்ரவேலின் மாபெரும் தீர்க்கதரிசி

**மையக் கருத்து: "அழியும் ஆத்துமா"**

குடும்பமாகச் சேர்ந்து 1. இராஜாக்கள் 17ம் அதிகாரத்தைப் படித்து முடித்தவுடன், வசந்தி கூறினாள்: "நான் சிறுவர் பள்ளியில் படித்தபோது எனக்குச் சொல்லப்பட்ட கதைகளில், எலியாவைத் தேவன் காகத்தைக் கொண்டு எவ்வாறு போஷித்தார் என்பது மிகவும் பிடித்திருந்தது" என்றாள்.

பீட்டர் தன் சகோதரிக்கு உத்தரவாக, "அதில் எதுவும் விசேஷம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை" என்று கூறினான்.

பிலிப்பு மிகவும் உற்சாகத்தோடு, "வேதாகமத்திலுள்ள தீரமான கதைகளில் எலியாவின் கதையும் ஒன்று" என்றான்.

"அவனுக்கு ஏன் திஸ்பியனாகிய எலியா என்று பெயர் வந்தது?" என்று ராஜன் கேட்டான்.

அவனுடைய தகப்பனார் விளக்க ஆரம்பித்தார். "எபிரேயு மொழியில் அவனுடைய பெயரை எலியா என்று உச்சரிப்பார்கள். அதன் அர்த்தம் என்னவென்றால், "எகோவா, அவரே கடவுள்." எலியா என்ற வார்த்தையில் அடங்கிய "ஏல்" என்றால் கடவுள் என்று பொருள். அதாவது, 'பெலன்' அல்லது 'வல்லமை'. எனவே எலியா என்றால், கடவுள் தம்மைப் பலிசாலியாகவும் வல்லவராகவும் வெளிப்படுத்துவார், என்பது பொருளாகும்.'' (தேவன் வல்லமையுள்ளவர்)



"ஆனால் திஸ்பியன் என்றால் என்ன அர்த்தம்?" என்று பீட்டர் கேட்டான்.

"திஸ்பியன்" என்பது அவன் பிறந்து வளர்ந்த ஊரின் பெயராகும். அது யோர்தான் நதியின் கிழக்கு திசையிலிருந்த கீலேயாத்தின் மேடும் பள்ளமுமான பிரதேசத்தில் இருந்தது. 'திஸ்பியன்' என்றால் "அலைந்து திரிகிறவன்" அல்லது பரதேசி என்று பொருள். எலியாவும் பிறஇஸ்ரவேலருக்கு அப்படி காணப்பட்டான்.

"இந்த சந்தர்ப்பத்துக்கு முன்பு அவன் இஸ்ரவேலில் எகோவாவின் தீர்க்கதரிசி என்று அறியப்பட்டிருந்தானா?" என்று விஜி கேட்டாள்.



அவள் தகப்பன் பதிலாக, "அது நமக்குத் தெரியாது. வேதாகமத்தில் எலியா சடிதியாக எச்சரிப்பு இல்லாமல் காணப்பட்டான். அவன் நமக்கு எந்தவகையிலும் அறிமுகம் செய்யப்படவில்லை. அவனுடைய பெற்றோர் மற்றும் வளர்ப்பு பற்றி எந்த தகவலும் இல்லை. இதற்கு முன்னால் அவன் கடவுளின் தீர்க்கதரிசியாக இருந்தானா என்ற தகவல் இல்லை. என்றாலும் அவன் இஸ்ரவேலின் நடுவில் அறியப்பட்டவனாக இருப்பதாக இந்த அதிகாரத்தல் வாசிக்கிறோம். கடவுள் ஆகாப் அரசனின் அரண்மனையில் நடந்த தீமையான களியாட்டு வெறியை மிகுந்த வருத்தத்தோடு கவனித்து, எலியாவை கடினமான வார்த்தையோடு எச்சரிக்கும்படி அனுப்பினார். வரப்போகிற நியாயத்தீர்ப்பு மற்றும் தண்டனையைக்கூறி ஆகாபை எச்சரிக்க சொல்லியனுப்பினார். ஏனெனில், அவன் தன் மனைவியாகிய யேசபேலை அனுமதித்து, இஸ்ரவேலில் தீமையையும், பாகால் அஸ்தரோத்தின் விக்கிரக வணக்கங்களையும் பரப்பியிருந்தான். வசந்தி அதற்குப் பதிலாக, "எலியா சமாரியாவுக்குப் போகையில் அங்குபெரிய பரபரப்பை ஏற்படுத்தியிருக்க வேண்டும்" என்றாள்.

பிலிப்பு அதை ஆமோதித்தான்," 1. இராஜாக்கள் 17ம் அதிகாரம் போன்ற வேதபகுதிகளைப் படிக்கும்போது, அங்கு நடந்த சம்பவங்களை மனதில் படம் பிடிப்பது நல்லது. கண்டிப்பான தீர்க்கதரிசி, தனது நீண்ட தாடி முடிகளுடன், மிருகத்தோல் அங்கி உடுத்தி கச்சை கட்டி வந்தது வசதி மிகுந்த சமாரியாவுக்கு ஒவ்வாத பாரம்பரியமாக இருந்திருக்கும். மேலும் அவன் அரசனைச் சந்திக்க வேண்டும் என்று பிடிவாதம் பிடித்தது ஏன் என்ற கேள்வியை வலுவாக

ஏற்படுத்தியிருக்கும்.

“ஆனால் அவன் ஆகாபின் அரண்மனைக்குள் நுழைந்தபோது எவ்வளவு ஆச்சரியத்தை உண்டாக்கியிருக்கும்! அந்நிய தேசத்து ராணியாக நுழைந்திருந்த யேசபேல் தனது அரண்மனை அங்கிகளைத்தைத்து உடுத்திருந்த முனிவர்களான கள்ளத் தீர்க்கதரிசிகளின் மத்தியில், நான் யெகோவாவின் தீர்க்கதரிசி என்ற உள்ளுணர்வுடன் முரட்டு மிருகத் தோலை வஸ்திரமாகப் போட்டதோற்றத்துடன் நுழைந்த எலியாவைக் கண்டு இகழ்ந்திருப்பாள். அவன் ராஜாவுக்குச் சமமாக அல்ல, அல்லது ராஜாவை ஒரு பொருளாக மதியாமல், அவனுக்கு மேலானவனாகவே உள்ளே நுழைந்தான்; யெகோவாவின் ஊழியன் சொல்வதை ராஜாகவனத்துடன் கேட்கவேண்டும் என்ற ஆணையுடன் சென்றான்.”

அவன் கூறினான்: ‘‘என் வாக்கின்படியே அன்றி இந்த மூன்றரை வருஷங்களிலே தேசத்தில் பனியும் மழையும் பெய்யாதிருக்கும் என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நிற்கிற நான் அவருடைய ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன்” (1 இராஜாக்கள் 17:1)

“அந்த செய்தியை ராஜா பயத்துடன் கேட்டான். பஞ்சம் ஏற்பட்டால் தனது தேசத்துகுடிமக்கள் எவ்வளவாகப் பாதிக்கப்படுவார்கள் என்று ராஜா அறிந்திருந்தான். இஸ்ரவேலர் முழுவதுமாக அவனைச் சார்ந்திருக்க செய்யும் செய்தியாக அது இருந்தது. ஆனால் ஆகாப் அந்தச் செய்தியைக் கேட்டவிதமாக யேசபேல் அதைக் கேட்கவில்லை. அவள் கர்த்தருடைய தீர்க்கதரிசியைக் கோபத்துடனும் ஏளனமாகவும் பார்த்தாள். அவனுடைய ஆத்திரம் எதுவாக இருந்ததென்றால், தனது அந்நிய தேவர்களை இஸ்ரவேல் தேசம் முழுவதும் வணங்கவைக்க வேண்டும் என்பதுதான்.”

‘‘எலியாவை அவள் யெகோவாவின் உயர்ந்த வீரனாகக்கண்டாள். அதனாலேயே அவன் மேல் அவளுக்கு ஆத்திரம் மூண்டது. அவன் அவ்வளவு வேகமாக அரண்மனைக்குள் பிரவேசித்து வலுக்கட்டாயமுறையில் தான் சொல்ல வேண்டிய யெகோவாவின் செய்தியை சொன்ன துணிச்சல் காட்டினதினிமித்தம் அவனைக் கொன்றுபோடத் தீர்மானித்தாள். ஆனால், கர்த்தருடைய செய்தியைச் சொல்லிமுடித்த எலியா யாருக்காகவும் காத்திராமல், அப்படியே திரும்பி, வந்த வழியாகத் நடந்து சென்றது எல்லோருக்கும் ஆச்சரியமாக இருந்தது. தன்னைக் கொன்றுப்போட தீர்மானித்த யேசபேல் ராணியின் முயற்சிகளுக்கு, பலவீன மனம் கொண்ட ஆகாப் ராஜா மிகவும் இலகுவாக இணங்குவான் என்று எலியாவுக்கு நன்றாகவே தெரியும். கர்த்தர் எலியாவுக்கு கட்டளையிட்டு, நீ போய் கேரீத் ஆற்றண்டையில் ஒழிந்திரு என்றார். இந்த ஆறு யோர்தானின் கிளைநதி. அந்த இடம் ஆள் நடமாட்டம் இல்லாத தனி காடாக இருந்தது.”

“கொஞ்சகாலத்துக்கு இந்த ஆற்றில் நீர் வந்தது. எலியா முன்னறிவித்த



பஞ்சத்தின் பிரதிபலிப்பை ஜனங்கள் உணர ஆரம்பித்தார்கள். ஆனால் எலியாவுக்கோ தேவையான தண்ணீர் கிடைத்து வந்தது. அவனுக்கு வேண்டிய ஆகாரமும் கிடைத்தது. அவனுக்கு வேண்டிய ஆகாரத்தினால் போஷிக்கும்படியாக கர்த்தர் காகங்களுக்குக் கட்டளையிட்டார். காலையும் மாலையும் தவறாமல் எலியாவுக்கு ஆகாரம் கிடைத்தது. அது எலியாவுக்கு மிகவும் சொகுசான அனுபவமாக இருக்கவில்லை. யாரும் அவனுக்குத் துணை இருக்கவில்லை. அவனை அழிக்க யெசபேல் முயன்றதை எலியா அறிந்திருந்தான். காகங்கள் படியளந்ததை எலியா பொறுத்துக் கொள்ள வேண்டியிருந்தது. ஆனால் சத்தியத்தை ஜனங்களிடம் அறிவிக்க வேண்டியதாகையால், அவன் இப்படிப்பட்ட ஒடுக்கத்தைப் பலியைப்போல ஏற்றுக் கொண்டான். அவன் எபிரேயர் 11:37ல் கூறப்பட்ட விசுவாசிகளைப் போல, *‘‘செம்மறியாட்டுத் தோல்களையும் வெள்ளாட்டுத் தோல்களையும் போர்த்துக்கொண்டு திரிந்து, குறைவையும் உபத்திரவத்தையும் துன்பத்தையும் அனுபவித்தார்கள்’’* என்பதுபோல் அனுபவித்தான். அவர்களுக்கு உலகம் பாத்திரமாக இருக்கவில்லை. இப்படிப்பட்ட தேவமனிதர்கள் தங்களுடைய உபத்திரவங்களுக்கப்பால், கர்த்தருடைய சித்தம் பரத்திலே செய்யப் படுவதுபோல பூமியிலேயும் செய்யப்பட வேண்டும் என்ற நாட்டமும் விசுவாச கண்ணோட்டமும் இருந்தது. எலியா பவுலைப்போல பின்வருமாறு எழுதக்கூடியவனாக இருந்தான். *‘‘நான் எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாயிருக்கக் கற்றுக் கொண்டேன்.”* (பிலிப்பியர் 4:11). நாம் எலியா மற்றும் பவுலைப்போல சத்தியத்துக்காகச் சிறுமையை அனுவித்த காலத்தைக் கடந்து நிற்கிறோம். ஆனாலும், *“போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம்”* என்று சொல்லக் கூடியவர்களாக மாற வேண்டும்.”

“எனினும் கடைசியில் கேரீத் ஆறு வற்றிப் போனதால், எலியா நகர வேண்டியதாயிற்று. கர்த்தர் அவனைச் சீதோன் பிரதேசத்திலுள்ள சாரிபாத் ஊருக்கு அனுப்பினார். அங்கு ஒரு விதவை அவனைப் போஷிக்கும் படிக்கு தேவன் அவளை ஆயத்தஞ் செய்தார்.”

தனது தந்தை பேசிக் கொண்டிருக்கும்போதே வசந்தி குறுக்கே பேசி, “கதையின் இந்தப் பகுதியை என்னால் புரிந்து கொள்ளவே முடியவில்லை,” என்றாள்.

“ஏன் அப்படி நினைக்கத் தோன்றுகிறது?”

“யேசபேலின் சொந்த இடம் சீதோன். எலியாவைக் கர்த்தர் அனுப்பினதும் அவனது மிக மோசமான எதிரியின் சொந்த இடம் அதனால் அவனுக்கு ஆபத்துநேரிடும் வாய்ப்பு இருக்குமல்லவா?”

பிலிப்பு பதிலாகக் கூறினான்: “அப்படியல்ல. எலியாவைத் தேடும்படி யெசபேல் தேடக்கூடிய கடைசி இடமாக சீதோன் இருக்கும். அவன் தனது சொந்த



ஜனங்களின் மத்தியில் புகலிடம் தேடுவான் என்று அவள் நினைக்கலாம். நிச்சயமாக அவளுடைய சொந்த இடத்தைக் குறித்து அவள் யோசிக்க எந்த வாய்ப்பும் இல்லை. தன்னுடைய சொந்த ஜனங்கள் தன்னிடம் உண்மை விசுவாசமாக இருப்பார்கள். ஆகையால் எலியாவைத் தன்னிடம் ஒப்புவித்து விடுவார்கள் என்று நினைத்தாள்."

"யெசபேல் எலியாவைத் தேடிக் கொண்டிருந்தாள் என்று நமக்கு எப்படி தெரியும்" என்று விஜி கேட்டாள்.

"இதன் விடையை நாம் அடுத்த அதிகாரத்தில் காணமுடிகிறது" என்று தொடர்ந்தார். அவள் தந்தை. *''இஸ்ரவேலில் மாத்திரமல்ல, எலியாவைத் தேடும்படி ஆகாப் மனுஷரை அனுப்பாத ஜாதியும் ராஜ்யமும் இல்லை."* (1 ராஜாக்கள் 18:10) என்று வாசிக்கிறோம். ஆகையால் தனது சொந்த தேசத்திலும் ஊரிலும் எலியா ஒழிந்திருப்பதாக அவள் கற்பனை செய்யவாய்ப்பே இல்லை.

உடனே ராஜன் புத்திசாலித்தனமாகக் கேட்டான், "எலியா யூதரல்லாத ஒரு பெண்ணிடம் அனுப்பப்பட்டது விநோதமாக உள்ளது. அவன் நிச்சயமாகத்தான் உதவிக்கென்று யூதரின் யாரிடமாவது தஞ்சம் புகுந்திருக்கலாமே!" என்றான்.

"அந்தப் பெண் சாதாரணமான ஒரு புறஜாதியாக இருக்கவில்லை" என்று பிலிப்பு உத்தரவைத் தொடர்ந்தார். அவள் கடவுளின் காரியங்களுக்குப் பயந்து நடந்தாள் என்றும், யெகோவாவை வணங்கும்படி சித்தங்கொண்டிருந்தாள் என்றும் வேதம் விளக்குகிறது. துரதிருஷ்டவசமாக, அன்று யேசபேலை எதிர்த்து எலியாவை ஆதரிக்கக் கூடிய மக்கள் மிக அற்பமாக இஸ்ரவேல் மக்கள் மத்தியில் இருந்தார்கள். ஒருவேளை அவன் காணப்பட்ட முரட்டுத் தனமான தோற்றமும் நடை உடை பாவனையும், அவன் கொடுத்து வந்த கூரான தேவசெய்திகளினிமித்தமும் இஸ்ரவேலில் அநேகர் அவனை உள்ளத்தில் வெறுத்திருப்பார்கள்.

"ஏன் அப்படிப் பேசுகிறீர்கள்?" என்று வசந்தி அப்பாவிடம் கோபித்துக் கொண்டாள். ஆனால் அவள் தந்தை பொறுமையாகப் பதிலளித்தார். "இந்தச் சந்தர்ப்பத்தைக் குறித்து நமது ஆண்டவர் இயேசு தாமே கூறியுள்ளதை நினைவு படுத்திக் கொள்ளுங்கள். *"தீர்க்கதரிசி ஒருவனும் தன் ஊரிலே அங்கீகரிக்கப்பட*



*மாட்டான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். அன்றியும் எலியாவின் நாட்களிலே மூன்று வருஷமும் ஆறு மாதமும் வானம் அடைபட்டு, தேசமெங்கும் மிகுந்த பஞ்சம் உண்டாயிருந்தபோது, இஸ்ரவேலருக்குள் அநேகம் விதவைகள் இருந்தார்கள். ஆயினும் எலியா சீதோன் நாட்டிலுள்ள சரெப்தா (சாரிபாத்) ஊரிலிருந்த ஒரு விதவையினிடத்திற்கு அனுப்பப்பட்டானேயல்லாமல் மற்றொருத்தியினிடத்திற்கும் அனுப்பப் படவில்லை."* என்று வேதவாக்கியத்தில் (லூக்கா 4:24-26) எழுதப்பட்டுள்ளது. இதன் மூலமாக இயேசு மறைமுகமான ஒரு உண்மையைக் கூறினார். இஸ்ரவேலில் காணப்பட்டிருக்க வேண்டிய தெய்வ விசுவாசம் அங்கு காணப்படாமல் ஒரு புறஜாதி விதவையிடம் காணப்பட்டது. இதைத் தவிர பல பாடங்களை இதிலிருந்து நாம் கற்றுக்கொள்ளக்கூடும்" என்றான்.

எவைகள்? என்று ராஜன் கேட்டான்.

"நாம் எலியாவைக் குறித்த சரித்திரத்தை அறிந்துகொண்ட பின் அவைகளை ஆராய்வோம். முதலில் நமக்குத் தேவையான தகவல்களை ஆதாரமாகச் சேர்த்துக் கொண்டால் பாடத்தைப் புரிந்து கொள்வது இலேசாகிவிடும்" என்றார், அவர்களது தகப்பனார்.

"எனக்கு ஒரு கேள்வி" என்று பீட்டர் தொடுத்தான்.

"என்ன அது?" என்று தந்தை கேட்க பீட்டர் "1 இராஜாக்கள் 17:9ல், *''உன்னைப் பராமரிக்கும்படி அங்கே இருக்கிற ஒரு விதவைக்குக் கட்டளையிட்டேன்''* என்று கர்த்தர் கூறினதாக எழுதப்பட்டுள்ளதே. அப்படியென்றால் சாரிபாத் ஊர் விதவைக்கு ஏற்கனவே கர்த்தர் சொல்லியிருந்தாரா?" என்று கேட்டான்.

"அப்படி சொன்னார் என்று அர்த்தங்கொள்ள அவசியமில்லை. அதன் அர்த்தம் என்னவெனில், அவள் இஸ்ரவேலின் தேவனை வணங்கும்படி ஊக்கமுடையவளாக இருந்தாள். அதனால், தேவனுடைய மனுஷனைப் பராமரிக்கும்படி அவள் பொருத்தமான பாத்திரமாக இருந்தாள். யாராவது ஒருவர் சத்தியத்தை அறிய நேரிடும்போது, அந்தச் சத்தியத்துக்கு மனதார கீழ்ப்படியும் பொறுப்பும் அதனுடன் சேருகிறது. ஆதலால், இந்த அறிவின் அடிப்படையில், தேவன் நேரடியாகப் பேசாவிட்டாலும், தமது வார்த்தையின் மூலமாக ஆண்களையும் பெண்களையும் கட்டளையிட்டு அவர்களைக் கிரியை செய்யும்படியாகத் தூண்டுகிறார்."

பீட்டர் மிகவும் தைரியமாக, "அப்படியானால், வேதாகமத்தில் இதற்கான ஆதாரம் இருக்கிறதா?" என்று கேட்டான்.

பிலிப்பு புன் முறுவலுடன் அதற்குப் பதிலளித்தார். "அப்போஸ்தலர் 17:30ல் இப்படிப்பட்ட ஒரு உதாரணத்தைப் பார்க்கிறோம். அதில் பவுல் கூறின

வார்த்தைகளைக் கவனித்தால் அது புரியும்." *இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார்.* "கர்த்தர் தமது வார்த்தையின் மூலமாக ஜனங்களோடு பேசுகிறார். எந்த சந்தேகமுமின்றி அந்தப் புறஜாதி பெண்ணுடன் கர்த்தர் இப்படித்தான் பேசியிருக்க வேண்டும். எரிகோவில் ராகாப், மோவாபியளான ரூத்தைப் போல அவளும் சிந்திக்கக் கூடிய ஒருத்தியாக இருந்தாள். அவள் பஞ்சத்திற்குக் காரணம் என்ன என்பதைவிசாரித்த போது, இவையெல்லாவற்றுக்கும் பின்னால் இஸ்ரவேலின் தேவனாகிய யேகோவா இருக்கிறார் என்பதைக் கற்றறிந்தாள். ஆகையால் அவர் ஒருவருக்கே பயந்து ஜீவிக்க வேண்டும் என்ற உணர்வைப் பெற்றிருந்தாள்."

பீட்டர் அதற்கு, "இது சற்று அதிகப் பிரசங்கித்தனமாக இருக்கிறது. ஏன் அப்படிப் பேசுகிறீர்கள்?" என்று கேட்டான்.

பிலிப்பு பிரதியுத்தரமாக, "எலியாவுடன் அவள் செய்த உரையாடல் அதை வெளிப்படுத்துகிறது. அவள் எலியாவிடம் *'உம்முடைய தேவனாகிய யெகோவாவின் ஜீவனைக் கொண்டு'* (வச 12) என்று சொன்னாள். இந்த வார்த்தைகளிலிருந்து, அவள் இஸ்ரவேலின் தேவனை ஆராதிக்கிறவள் அல்ல என்று 'உமது தேவன்' என்று அவள் சொன்னதிலிருந்து தெரிகிறது. ஆனாலும் அவளுடைய உரையாடலிலிருந்து, யெகோவா தேவன் ஜீவிக்கிறவர் என்று நம்பினதினாலே, அவர் நன்மையும் தீமையையும் செய்ய வல்லவர் என்று முழுவதுமாக நம்பினாள். அதினாலே அவள் தேவையான அளவு அவர்மேல் பயபக்தியுள்ளவளாக, *"தேவனுக்குப் பிரியமாயிருக்க வேண்டும் என்றால், தேவன் ஒருவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவர் என்றும் விசுவாசிக்க வேண்டும்"* (எபிரேயர் 11:6) என்று நம்பினாள்.

### எலியாவும் சாரிபாத் விதவையும்

"எலியா கர்த்தருடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்தவனாய் சாரிபாத் ஊருக்குச் சென்றான். அந்த ஊர் வாசலுக்கு வெளியே ஒரு விதவை காய்ந்துப்போன குச்சிகளை விறகுக்காகச் சேகரிப்பதைக் கண்டான். அவளை அவன் உற்றுப் பார்த்து அவளிடம் உரையாட ஆரம்பித்தான். அவள் அவனுடைய விநோதத் தோற்றத்தைக் கண்டவுடன் பயந்தாள். ஒரு மனுஷன் கடினமான ஆட்டுத் தோலைப் போர்த்துக் கொண்டு, நீண்ட தாடியும் முடியும் வளர்த்து, முரட்டுத் தனமான தோற்றத்தில் வந்திருந்தது அவளுக்கு வியப்பாக இருந்தது. பஞ்சத்தினிமித்தம் இளைத்துப்போன ஒருவனைப் போன்று ஒட்டிப்போன உருவமாக இருந்திருக்கலாம்."

"நான் குடிக்கும்படி ஒரு குவளையில் நீர் கொண்டுவா" என்று அந்தப் பெண்ணிடம் கேட்டான். அவள் அப்படியே கொண்டுவரும்படி திரும்புகையில், அவளை மறுபடியும் அழைத்துப் பேசினான். "நீ வரும்போது ஒரு அப்பத்தைச் சுட்டு அதையும் கொண்டுவா" என்றான்.

"அது அவளுடைய தகுதியை மீறினதாக இருந்தது. அவன்தான் எலியா தீர்க்கதரிசி என்று அவள் அறிந்துகொண்டாள். ஏனெனில் எல்லா புறதேசத்துக்கும் எலியாவைக் கண்டு பிடித்து தன்னிடம் ஒப்படைக்கும்படி யேசபேல் கட்டளையிட்டிருந்தாள். எனினும், அந்ததேசத்தின் பஞ்சத்தைக் கட்டளையிட்டவர் யெகோவா என்ற பயம் அவள் மனதிலிருந்தபடியால் அவனுக்கு உதவிசெய்ய ஆயத்தமாக இருந்தாள். ஆனால் அவனுக்குப் போஜனம் வைக்க அவளிடம் வசதி இருக்கவில்லை."

*"உம்முடைய தேவனாகிய யெகோவாவின் ஜீவனைக் கொண்டு சத்தியமாகச் சொல்லுகிறேன். என்னிடம் அப்பம் இல்லை. ஆனால் கொஞ்சம் ரொட்டிமாவும், ஒரு கிண்ணத்தில் எண்ணெயும் உள்ளது. நான் இந்த விறகு கொண்டு எனக்கும் என் மகனுக்கென்றும் அப்பம் சுட்டுத்தின்றப்பின் மரிக்கும்படி ஆயத்தமாக இருக்கிறோம்."*

"அந்த ஏழைப் பெண் தேவைநிறைந்த மனநிலையில் இருந்தாள். அவளும் அவள் மகனும் மரணத்தின் விளிம்பில் இருந்தனர். அந்த வேளையிலும் அவள் இஸ்ரவேலின் தேவன் ஜீவிக்கிற தேவன் என்று அறிக்கை செய்தாள். அதனால் அவர் என்னென்ன சொல்லுகிறாரோ அதையெல்லாம் செய்யும்படி ஆயத்தமுள்ளவளாகவும் இருந்தாள்.

எலியா அவளிடம், *"பயப்படாதே நீ சொன்னபடியே செய். ஆனால் முந்தி போய் முதலில் எனக்கு ஒரு சிறிய அடையைப் பண்ணி என்னிடம் கொண்டுவா. பின்பு உனக்கும் உன் பிள்ளைக்கும் செய்து சாப்பிடுங்கள்"* என்றான்.

"இவ்வாறு எலியா முதலில் தனக்குக் கொண்டுவரும்படி அந்தப் பெண்ணிடம் கூறினான். அவன் தன்னயமாக அப்படிச் சொல்லவில்லை. அவன் தேவனுக்கு முன்பாக மக்கள் பிரதிநிதியாக இருந்ததாலும் தேவ ஊழியனாகவும் இருந்ததாலும் அப்படி கூறினான்" (மத்தேயு 10:41). மேலும் அவள் அப்படியே செய்தால் அவளும் அவள் குமாரனும் குறைவில்லாமல் எவ்வாறு ஜீவித்திருக்க முடியும் என்பதையும் கூறினான். அந்த சூழ்நிலை விதவைப் பெண்ணுக்கு இக்கட்டான தீர்மானம் எடுக்க வேண்டியதாக இருந்தாலும், தேவனுடைய தீர்க்கதரிசி சொன்னபடியே செய்ததால் அவள் விசுவாச ஜீவியத்தின் சவாலை ஏற்றுக்கொண்டாள்.

"அவள், தேவன் தமது வார்த்தையில் உண்மையுள்ளவர் என்பதைக் கண்டு கொண்டாள்". அதன்படியே, பஞ்சகாலம் தீருமட்டும் அவளுடைய மாபிசைகிற தொட்டியில் மாவு குன்றாமலும் எண்ணெய் குப்பியில் எண்ணெய் தீராமலும் இருந்தது.

“அவளுக்கு எதற்காக எண்ணெய் தேவையாக இருந்தது ?” என்று வசந்தி கருத்துடன் கேட்டாள்.

அவளுடைய தகப்பனார் உத்தரவாக, “எண்ணெய் என்று கூறும்போது அது ஒலிவ எண்ணெயைக் குறிக்கும். இஸ்ரவேலர் அதைச் சமயலுக்குப் பயன்டுத்தினார். அவர்கள் ரொட்டி சுடுவதற்கும் அதையே உபயோகித்தனர். உணவில் அதன் சத்தும் விலையும் கூடுதலாக இருந்தது. சாரிபாத் பட்டணம் ஆசேர் நாட்டில் இருந்து (யோசுவா 19:28) அந்த பட்டணம் ஒலிவ எண்ணெய் தயாரிப்புக்குப் பெயர் பெற்றிருந்தது. (உபாகமம் 33:24) இதனால் என்னவோ, நாட்டின் பிற பகுதிகளில் பஞ்சத்தின் பாதிப்பு அதிகமாயிருந்தும், அந்த விதவை பெண்ணிடம் ஒலிவ எண்ணெய் மீந்திருந்தது ஆச்சரியப் படுவதற்கில்லை”.

**அவளுடைய உபசரிப்புக்குக் கடவுள் பிரதிபலன் தந்தது எப்படி ?**



“கடவுளுடைய திருப்பெயரில் செய்யப்படும் எந்த நற்கிரியையும் அவர் சுலபமாக மறப்பதில்லை என்பதை வெகு சீக்கிரத்தில் அந்த விதவை அறிந்து கொண்டாள்” என்று பிலிப்பு கதையைத் தொடர்ந்தார். “அந்தப் பாடத்தை நாம் மறக்கவே கூடாது. தேவன் நாம் கொடுத்த கடனை வெகு சீக்கிரத்தில் திரும்பக் கொடுத்து விடுகிறார். உண்மையாக அவருக்குக் கீழ்ப்படிந்து, சரியான சிந்தையோடு கர்த்தருக்கென்று செலவழித்தால் நாம் ஆசீர்வாதம் பெறுவோம். நீதிமொழிகள் 3:9-10ல் நாம் இவ்வாறு படிக்கிறோம். *“உன் பொருளாலும், உன் எல்லா விளைவின் முதற் பலனாலும் கர்த்தரைக் கனம் பண்ணு. அப்பொழுது உன் களஞ்சியங்கள் பூரணமாய் நிரம்பும்; உன் ஆலைகளில் திராட்ச ரசம் புரண்டோடும்”.* சாரிபாத் விதவை இந்த வேதவாக்கியத்தை உண்மையெனக் கண்டாள். அவளுக்கு மிகுந்த வருத்தம் உண்டாயிருந்த போதிலும் அதினூடே அவள் மகிழ்ச்சியைக் காண முடிந்தது. அவளுடைய ஒரே பையன் வியாதிபட்டு இறந்துப் போனான். எளிமையான விதவை தாய் தன்னந்தனியாகி விட்டாள். அவள் தனது



பிரச்சனையின் போது எலியாவைத் தவிர யாரையும் அவள் தேடவில்லை. தனது அந்த இழப்புக்குக் காரணத்தையும் ஏன் தனது பையன் மரித்தான் என்பதையும் அறிய முற்பட்டாள்”.

உடனே வசந்தி தனக்கு முன் திறந்த வேதாகமத்தை வைத்துக்கொண்டு தன் தந்தையை இடை மறித்தாள். “இங்குதான் நீங்கள் சொல்வது புரியவில்லை, வசனம் 18ன்படி, அவள் எலியாவிடம், *“தேவனுடைய மனுஷனே, எனக்கும் உமக்கும் என்ன ? என் அக்கிரமத்தை நினைக்கப் பண்ணவும், என் குமாரனைச் சாகப் பண்ணவுமா ? என்னிடத்தில் வந்தீர்”* என்று சொன்னாளே” என்றாள்.

அவள் தகப்பனார் அவளுக்குப் பதில் கொடுத்தார் : “முதலாவது நீ கவனிக்க வேண்டியது எதுவென்றால், அந்தப் பெண் எலியாவை, “தேவனுடைய மனுஷனே” என்று கூப்பிட்டாள். அதன்படி அவனை உண்மையாகத் தேவனுடைய ஊழியனாகிய தீர்க்கதரிசியாக அவள் அங்கீகரித்தாள் என்று அர்த்தமாகிறது. ஆனால் அவள் தேவனைப்பற்றி பேசும்போதெல்லாம் யெகோவாவைக் கருத்தில் வைத்தாளா என்ற கேள்வி இருந்தாலும், தனது கடந்த கால பாவத்தைத் தண்டிக்கும்படி இதெல்லாம் நடந்தது என்றும் ஒப்புக் கொண்டாள். அவள் “என் பாவம்” என்று குறிப்பிட்டு அதை ஒரு காரியமாகக் கூறுவதைக் கவனியுங்கள். ஒருவேளை அவள் தனது கடந்தகால விக்கிரகாராதனையையும் அதனுடன் சேர்ந்த தேவனுக்கு விரோதமான அக்கிரமங்களில் ஈடுபடும்படி யெசபேல் தூண்டின அட்டூழியங்களிலும் தனது பங்கை நினைவு கூர்ந்திருக்கலாம். வேதனை, துக்கம், சோகமே உருவான அவள், இறந்துப்போன தனது குமாரனைக் கையில் ஏந்தினவளாய், கண்ணீர் நிறைந்த முகத்துடன் தீர்க்கதரிசியிடம் வந்தாள். அவன் இரக்கம் நிறைந்தவனாக, “உன் குமாரனை என்னிடம் கொடு” என்றான்.

இறந்துப்போன பையனின் செத்த சடலத்தைத் தனது மேலறைக்கு எடுத்துச் சென்று, அவன் படுக்கையின்மேல் அவனைக் கிடத்தி, அவன்மேல் படுத்து, பின்பு ஜெபித்தான். யெகோவா அவனை மீண்டும் உயிர் பிழைக்கச் செய்யும்படி கருத்தாய் வேண்டினான் இப்படி மூன்று முறை அவன்மேல் குப்புறப் படுத்து, தேவன் அற்புதம் செய்யும்படியாக ஊக்கமாய் ஜெபித்தான். அற்புதமாக தீர்க்கதரிசியிலிருந்த உஷ்ணம் செத்த சரீரத்தில் பாய்ந்து, சூடேறி, அவன் மூச்செடுக்க ஆரம்பித்தான். பின்பு நித்திரையிலிருந்து எழுந்தவனைப்போல உட்கார்ந்தான்.

“உயிர்பிழைத்த பையனை எலியா கீழிறங்கி அவன் தாயிடம் உயிரோடு ஒப்படைத்தபோது இருந்த மகிழ்ச்சி எவ்வளவாக இருந்திருக்கும்! அவனை அள்ளி அணைத்து முத்தங்கொடுத்து எவ்வளவாக அவனைக் கொஞ்சியிருப்பாள்! அவள் கடவுளுக்காக தன்னை வெறுத்து செய்த சேவைகள் வீணாகவில்லை என்று இப்போது அவள் புரிந்துக் கொண்டாள். தீர்க்கதரிசியின் தேவன் கொடுத்த



கட்டளைகளுக்கு அவள் கீழ்ப்படிந்ததினிமித்தம் ஆயிரம்மடங்கு ஆசீர்வதிக்கப் பட்டாள். அவளுடைய வீட்டில் எலியாதங்கினது அவளுக்கு ஆசீர்வாதமாக மாறியது. அவளுடைய முழு குடும்பமும் பஞ்ச காலத்தினூடே செழிப்பாக சாப்பிட்டதுடன், மரித்தமகன் உயிர் பெற்ற அற்புதங்கள் நடைபெற்றன."

பிலிப்பு தொடர்ந்தார்: "அந்த விதவை பெற்ற ஆசீர்வாதங்களைப்போல நாமும் பெறப்போகிற ஆசீர்வாதங்கள், நாம் தேவசித்தத்தை நிறைவேற்றும்படி செலவழிக்கிற நமது பெலன் மற்றும் முயற்சிகளைப் பொருத்து இருக்கும். தேவன் விரும்பும் வகையில் நாம் அவரைச் சேவித்து வந்தால், நமது தேவைகளை அவர் சந்திப்பதுடன், நமது மரணத்துக்குப்பின் உயிர்த்தெழுதல் மூலமாக புதிய ஜீவியத்தையும் தருவார் என்ற மகிழ்ச்சி நமது உள்ளங்களை நிரப்பும். சுருக்கமாகச் சொன்னால், அந்த விதவை பெண் கர்த்தருக்குச் சித்தமாக சேவிப்பதால் இம்மைக்குரிய ஆசீர்வாதம் மட்டுமின்றி வரப்போகிறகாலத்தில் நித்தியஜீவன் பெறலாம் என்று கற்றுக் கொண்டாள்."

"சாரிபாத் விதவையின் காலத்தில் பஞ்சமும் பட்டினியும் துன்பமும் எங்கும் காணப்படும் போது அவள் சுகசௌக்கியமான சந்தோஷத்துடன் ஜீவித்தாள். அதனால் அவள் தேவனுடைய மனுஷனாகிய எலியாவிடம், *"நீர் தேவனுடைய மனுஷன் என்றும், உம்முடைய வாயிலிருந்து பிறக்கும் கர்த்தரின் வார்த்தை உண்மை என்றும், இதினால் இப்போது அறிந்திருக்கிறேன்."* என்று மகிழ்ச்சியுடன் கூறினாள்."

''எனக்கு ஒரு கேள்வி'' என்று பீட்டர், தனது தந்தை தொடர்ந்து பேசுவதற்குள் இடைமறித்தான்.

"அது என்ன?"

''வசனம் 22 கூறுகிறது: ''பிள்ளையினுடைய ஆத்துமா அவனுள் திரும்பிவந்தது.'' இதைக் கொண்டு ஆத்துமா அழியாதது என்று போதிக்கலாமல்லவா?"



"அது அப்படிதான் உபயோகப்படுகிறது'' என்று ஆமோதித்த பிலிப்பு தொடர்ந்தார்.

"ஆனால் சற்று ஆழமாகச் சிந்தித்தால் அந்த வார்ர்தையின் அர்த்தம் அப்படியல்ல, அதுதவறு என்று புரியும். அந்த பிள்ளையின் ஆத்துமா பரலோகத்துக்குச் சென்றிருக்குமானால், எலியா அதைத் திரும்பவும் நாசமும் மோசமும், பஞ்சமும் பட்டினியும், தேவ ஆராதனைக்கு விரோதமும் நிறைந்த இந்த உலகத்துக்குக் கொண்டுவர முயற்சி செய்யவேண்டும்? பிள்ளை பரலோகத்தில் நன்றாக இருந்திருக்குமே!" என்றான்.

ஆனால் பீட்டர் பொறுமையற்றவனாக, "ஆத்துமா அழியாது என்ற போதனை வேதாகமத்தில் இல்லை. நான் அறிய விரும்பினது, "பிள்ளையின் ஆத்துமா அவனுள் திரும்பி வந்தது" என்றால் என்ன அர்த்தம்?" என்று கேட்டான்.

"ஆத்துமா" என்று இங்கு கூறப்பட்ட வார்த்தையின் மூலவார்த்தை எபிரேயு பாஷையில் 'நெஃபேஷ்' என்று சொல்லப்படுகிறது. அதேவார்த்தை ஆதியாகமம் 9:4, உபாகமம் 12:23 மற்றும் பிற வேதவசனங்களில் 'உயிர்' என்று அழைக்கப்பட்டுள்ளது. வேவியராகமம் 17:11 இவ்வாறு வாசிக்கிறோம்: "மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது" இதன் எபிரேயு பாஷையில் 'ஆத்துமா' என்பதற்குப் பதிலாக 'உயிர்' என்ற வார்த்தை பயன்பட்டிருக்கிறது அதைத்தான். 1 இராஜாக்கள் 17:22லும் பயன்படுத்தியிருக்க வேண்டும். பிள்ளையின் உயிர் அவனுள் திரும்பவந்தது என்று எழுதியிருக்க வேண்டும் என்று பதிலளித்தார்.

ராஜன் இந்த முறை வாய்திறந்து, "நீங்கள் சொன்ன இந்த வேதவசனங்களில் மாத்திரம் தான் ''நெஃபேஷ்'' என்ற வார்த்தையை 'உயிர்' என்று மொழிபெயர்த்துள்ளார்களா?" என்று கேட்டான்.

"அப்படியல்ல, வேதாகம் சொல்லகராதி எடுத்து அதினூடே பார்த்தால் 'நெஃபேஷ்' என்ற வார்த்தை 'உயிர்' என்ற அர்த்தத்தில் நூற்றுக்கும் அதிகமான முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளதைக் காணலாம். எபிரேயு மொழியில் அதன் மூலவார்த்தை 'சுவாசம்' என்பதிலிருந்து உருவானது. ஆகையில் ஆதியாகமம் 2:7ல் கூறப்பட்டது ஜீவஇராசிகளுக்கும் பொருந்தும்" என்று பதிலளித்தார்.

அந்த வசனத்தைக் குறித்து குழப்பமாக இருந்த ராஜன், "அது விநோதமான வெளிப்பாடாக இருக்கிறது" என்றான், கிண்டலாக!

தகப்பனார் பொறுமையாக விளக்கினார். "நிஜம்தான். அது எபிரேயு மொழியில் வேதாகமத்தில் பலவிதமான வழிகளில் கையாளப்பட்டிருக்கிறது. நியாயாதிபதிகள் 15:19 இதுவும் 1. சாமுவேல் 30:12 இலும் 'மயக்கநிலை தெளிவு' குறித்து அர்த்தமாகிறது. சற்று அப்புறம், மயக்கி கிடந்து உயிர்போகிற நிலையில் தாவீது கண்ட எகிப்தியனைக் குறித்து எழுதப்பட்டுள்ளது. அவனுக்கு ஆதாரம்

கிடைத்தவுடன் ‘அவன் உயிர் அவனுக்குள் வந்தது’ என்று அவனுடைய ஆவி குறித்து எழுதப்பட்டுள்ளது. ஆனால் கர்த்தர் அவனுக்கு உயிர் கொடுத்து உண்மையாகிறது. இதைத்தான் விதவையின் பிள்ளையின் உயிர் அவனுள் திரும்ப வந்தது, என்று வாசிக்கிறோம். அதனால் இப்படிப்பட்ட சில வேதவாக்கியங்களை மக்கள் பொருக்கி எடுத்து தங்களுடைய வசதிபோல ‘ஆத்துமா அழியாது’ என்று போதிக்க புறப்பட்டு விடுகிறர்கள். ஆகையால் நான் உங்களுக்குப் போதித்த இவைகளை நீங்கள் உங்கள் வேதாகமத்தில் குறியிட்டு, பிறர் அதைச் சரியாகப் புரிந்துகொள்ள உதவி செய்யுங்கள்.” என்றார்.

## ஆத்துமாவின் தகுதி குறித்து வேதாகமத்தில் எழுதியுள்ளவை

“ஆத்துமா” என்ற வார்த்தை வேதாகமத்தில் குறிப்பிட்ட மனுஷனை மனதை, படலமாற்றம், உயிர் போன்றவைகளை அழிவுக்குள்ளானதாகச் சித்தரித்துப் பேசியுள்ளது. அது பழைய ஏற்பாட்டில் “நெஃபேஷ்” என்ற எபிரேயு பதத்திலும், புதிய ஏற்பாட்டில் ‘ஸ்யூக்’ என்ற கிரேக்க பதத்திலும் எழுதப்பட்டுள்ளது. அவைகளில் சிலவற்றின் பிரயோகத்தின்படி ஆத்துமா:

பிறக்கிறது ஆதியாகமம் 46:18,27, தின்ன முடியும்: யாத்திராகமம் 12:16; உபாகமம் 12:20; லேவியராகமம் 17:10-12; லூக்கா 12:19. அப்பம் புசிக்கிறது. ஓசியா 9:4. மரிக்கவேண்டும். சங்கீதம் 22:29. அதற்கு வாய் உண்டு. சங்கீதம் 103:2-5 உதடுகள் உண்டு. லேவியராகமம் 5:4. இரத்தம் உண்டு. எரேமியா 2:34. தாகம் ஏற்படும் சங்கீதம் 42:2. சும்மா இருக்க முடியும். நீதிமொழிகள் 19:15. அழுகிறது எரேமியா 13:17. அது தொடமுடியும்: லேவியராகமம் 5:2. அதைத் தொடமுடியும்: எண்ணாகமம் 19:17. சாகமுடியும்: யோசுவா 11:11; எசேக்கியேல் 18:4. பட்டயத்தால் மடியமுடியும்: யோசுவா 11:11; ஊடுருவ குத்தமுடியும் : லூக்கா 2:35. குழியில் போடமுடியும்: யோபு 33:18; ஏசாயா 38:17. கல்லறைக்குள் போகும்: சங்கீதம் 86:13; 56:13. **மீட்பு தேவை:** சங்கீதம் 49:15. **உயிர்த்தெழுதல் தேவை:** சங்கீதம் 89:48; 49:15.

இவ்வாறு மனிதன் அழிவுக்குரியவன் என்று வேதாகமம் தெளிவாகப் போதிக்கிறது. அவனுடைய ஜீவன் மட்டுப்பட்டது. (சங்கீதம் 144:3-4), மரணத்திற்கென்று நியமிக்கப்பட்டவன் (சங்கீதம் 89:48). அவனுடைய ஒரே நம்பிக்கை உயிர்த்தெழுதலில் அடங்கியிருக்கிறது (1 கொரிந்தியர் 15:50), அவனுடைய திவ்விய சுபாவத்துக்கு மாறவேண்டுமானால் இயேசு கிறிஸ்து பரத்திலிருந்து திரும்ப வரும்போது அவரின் அற்புதமான ஒரே கிரியையின் மூலமாக மாத்திரம் கூடும். (பிலிப்பியர் 3:21).



# வண்டியை ஓட்டுங்கப்பா



பழைய கதை ஒன்றுண்டு. ஒரு மனிதன் எந்த அளவுக்கு சோம்பேறியாய் இருந்தானென்றால், அந்த ஊர் மக்கள் அவனை ஒரு வண்டியிலேற்றிக் கல்லறைத் தோட்டத்தில் அவனை உயிரோடு புதைத்துவிட வேண்டுமென்று முடிவெடுத்தார்கள். வழியிலே விவசாயி ஒருவன் ஊர்வலத்தை நிறுத்தி விஷயத்தைக் கேட்டறிந்தான். சோம்பேறியின் பரிதாபநிலை அறிந்த அவன், சோம்பேறி உயிரோடு புதைக்கப் படாதபடி தடுக்க, ஒரு மூட்டை நெல் அவனுக்குத் தருவதாகக் கூறினான். சோம்பேறி மெதுவாகத் தன் முழங்கையை ஊன்றி, தலையைத் தூக்கி, ‘அது உமி நீக்கப்பட்டதா?’ என்று கேட்டான். இல்லை எனவிவசாயி பதிலளித்தும், சோம்பேறி மறுபடியும் படுத்துக் கொண்டு, “வண்டியை ஓட்டுங்கப்பா” என்றானாம்.

ஒருவகையில், நாமெல்லாருமே ஒரு வண்டியில் கல்லறைக்குக் கொண்டுபோகப்படுகிறவர்கள் தாம். நமக்கு தேவனால் இரட்சிப்பு இலவசமாகக் கொடுக்கப்படுகிறது. அது தேவனுடைய ஈவு. “தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.” *‘‘விருப்பமுள்ளவன் ஜீவத் தண்ணீரை இலவசமாய் வாங்கிக் கொள்ளக்கடவன்”* எனக் கிறிஸ்து அழைக்கிறார். துக்கமான விஷயம் யாதெனில் தேவனுடைய ஈவை இலவசமாகப் பெறுவதற்குக் கூட பெருத்த சோம்பேறிகளாயிருக்கிறார்கள் - ‘ஒட்டுங்கப்பா’ என்று சொன்ன சோம்பேறி மாதிரி.

என்ன ஒரு பரிதாப நிலை. யாரும் கெட்டுப் போவது தேவனின் சித்தமல்ல.

இருப்பினும் மனித குலத்தின் பெரும்பகுதி மரணவண்டியை விட்டிறங்கி, கிறிஸ்துவின் நுகத்தை ஏற்றுக்கொள்ள முடியாத அளவுக்குச் சோம்பேறிகளாயிருக்கிறார்கள். தம் நுகத்தை நம் மீது ஏற்றுக்கொள்ளும்படி இயேசு கேட்கிறார். அவருடைய நுகம் மெதுவாயும் அவரின்சுமை இலகுவாயும் இருக்கிறது என நமக்கு உறுதிபடக் கூறுகிறார்.

தேவனுடைய மகிமையான ஈவையும், பாவிக்காகக் காத்துக் கொண்டிருக்கிற துக்கம் தரத்தக்கப் பரிதாப நிலையையும் நாம் சிந்தித்துப் பார்க்குங்கால், நம் அயலகத்தார் தேவனை அசட்டை பண்ணுவதைப் பார்த்துத் திகைத்து நடுங்குகிறோம். அதே சமயம், நாமும் அந்த ‘ஒன்றும் செய்யாமல் சும்மா இருக்கும்’ நிலைக்குள் போகாதபடிக்கு நம்மைக் காத்துக்கொள்ளவேண்டும். அது ஒருபயங்கரமான தொற்றுவியாதி. நாம் நம் எதிர்ப்பு சத்தியை வளர்த்துக்கொள்ளாவிடில் வேகமாகப் பரவிவிட்ட அந்த வியாதி நம்மை எளிதில் தொற்றிக் கொள்ளக்கூடும்.

வாழ்க்கையின் ‘கட்டாயங்கள்,’ பாவத்தின் வஞ்சகமாய் மயக்கும் இன்பங்கள் ஆகியவை நம்மை அடிக்கடி திசை திருப்புகின்றன. நாம் விழிப்பாயில்லாவிடில், நம் இரட்சிப்பு நிறைவேற, பயத்துடனும் நடுக்கத்துடனும் பிரயாசப்பட நேரமில்லாமல் போகிறதாய்க் காண்போம். வெகு சீக்கிரத்தில் மரணத்திற்குக் கொண்டு செல்லும் வண்டியில் நாம் இருப்பதைக் காண்போம். இரண்டே இரண்டு வழிகள்தான் உள்ளன. ஒன்று நாம் கிறிஸ்துவுக்கென வாழ்கிறோம் அல்லது மாம்சத்திற்கென வாழ்கிறோம். “பாவத்தின் சம்பளம் மரணம், தேவனுடைய வரமோ நித்திய ஜீவன்.” தெரிந்துகொள்ளுதல் நம்முடையது.

‘‘கிரியையில்லாத விசுவாசம் செத்தது, என யாக்கோபு நமக்கு நினைவூட்டுகிறார். இரட்சிப்பு தேவனுடைய ஈவு. ஆனால் மனந்திரும்புதலுக்கேற்ற கிரியைகள் உள்ளவர்களுக்கே அவர் அதை அருளுவார். நாம் கர்த்தருக்கு அளவிற்கு அதிகமாக ஒருபோதும் செய்துவிட முடியாது. நம்முடைய மிகச் சிறந்ததற்கும் குறைவாக எதையும் நாம் தேவனுக்கென்று செய்யச் துணியமமாட்டோம். விளையாட்டுப் போட்டிகளில், வெற்றி வாகை சூடும்வீரன், போட்டி நேரத்தில் தனக்குள்ளதெல்லாவற்றையும் கொடுக்கின்றான். கர்த்தருடைய திராட்சத் தோட்டத்தில் நாம் சோம்பேறிகளாக, மெத்தனப் போக்குள்ளவர்களாக இருக்கத் துணிய மாட்டோம். நாம் செய்வதெல்லாவற்றையுமே நம் பரம பிதாவின் மகிமைக்காகவும், கனத்திற்காகச் செய்வோமாக.

மரண ஊர்தியினின்று இறங்கி, கர்த்தருடைய திராட்சத் தோட்டத்தில் மும்முரமாய் வேலையில் ஈடுபட ஞானமுள்ளவர்களாயிருக்க வேண்டும். தொடர்ந்து



ஊர்தியில் செல்வது மரணத்திற்குத் தான் கொண்டு செல்லும். நம்மில் ஒவ்வொருவருக்கும் ஒன்றிரண்டு தாலந்துகள் (திறமைகள்) உள்ளன. நம் தாலந்திற்கான கணக்கைக் கர்த்தர் நம்மிடம் கேட்கும்போது, நம்மிடம் உள்ளதைப் பயன்படுத்திய விஷயம் தான் நம் எதிர்காலத்தை முடிவு செய்யும்.

*‘‘நீங்கள் அசதியாயிராமல், வாக்குத்தத்தமான ஆசீர்வாதங்களை விசுவாசத்தினாலும் நீடிய பொறுமையினாலும், சுதந்தரித்துக் கொள்ளுகிறவர்களைப் பின் பற்றுகிறவர்களாயிருங்கள். உங்கள் கிரியையையும் அன்புள்ள பிரயாசத்தையும் மறந்துவிடுகிறதற்கு தேவன் அநீதியுள்ளவரல்லவே’’* எபிரேயர் 6:10,11.

---

# வேதாகம சத்தியத்திற்குச் சான்று

# எகிப்து பற்றி வேதாகமம் முன்னறிவித்தது

## அ. தீபிஸ் (எபிரேய மொழியில் நோ)





வலப்பக்கத்திலுள்ள படம் கர்னாக் கிலுள்ள கோயிலின் மகத்தான அழிவுகள், பண்டைய நகரமான தீபிஸ்ஸின் ஒரு பகுதி. இன்று வரையுள்ள அழிபாடுகளின் மூலம், தீபிஸ்ஸின் மேன்மையையும், அதன் கோயிலையும் இப்போதும் இருக்கிற அழிபாடுகளில் காணலாம். படத்திலுள்ள மக்களின் அளவைக் கொண்டு கோயில் எவ்வளவு பெரிது எனத் தெரிந்து கொள்ளலாம்.

நான் நோப்பட்டணத்தில் ஆக்கினைக்ளைச் செய்வேன்... நோபட்டணம் தகர்ந்து இழந்து போகும்.

தீபிஸ் பற்றிய இந்த பின்னறிவிப்பு கி.மு. முதல் நூற்றாண்டில் நிறைவேறியது. கிளியோபத்ராவின் தாஹ்வாகிய டாலமி லதிரஸ் என்பவரால் இந்த நகரம்

முற்றுகையிடப்பட்டது. மூன்று வருடம் வரை சரணடையாத தீபிஸ் கடைசியில் தோற்றுப்போனது. லதிரஸ் தீபிஸை முற்றிலும் அழித்துப்போட்டார். பின்னர் அது சிறு சிறு குக்கிராமங்களானது. அதில் குடியிருந்த மக்கள் திரும்பி வரவில்லை. எசேக்கியேல் முன்னறிவித்தபடியே 'ஏராளமான ஜனம்' சங்கரிக்கப்பட்டது.



ஒரு பெரிய சேனையால் தீபிஸ் தாக்கப்படும்.

ஏராளமான ஜனம் சங்கரிக்கப்படும்.

துல்லிபமான தெளிவான தீர்க்கதரிசனம்

## ஆ) மெம்ர்பிஸ் (எபிரேய மொழியில் நோப்)

மெம்பிஸ் பற்றி இரு தீர்க்கதரிசனங்கள் உண்டு.

*"நோப் பாழாகும்; அது குடியில்லாமல் சுட்டெரிக்கப் பட்டுக் கிடக்கும்."* எரேமியா 46:19.

இரண்டாவது தீர்க்கதரிசனம் இன்னும் தெளிவாயுள்ளது.



கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்; நான் விக்ரகங்களை அழித்து, நோப்பின் சிலைகளை ஒழியப்பண்ணுவேன். எசேக்கியேல் 30:13

நீங்கள் காணும் படத்தில் மெம்பிஸ்ஸில் இப்போது எதுவுமே இல்லை. அதன் தேவன் தாவின் கோயில் பற்றியும் எதையும் காணோம். இதற்கு நேர் எதிராக தீபிஸ்ஸில் கோயிலின் அழிபாடுகளைக் கண்டோம். எகிப்தின் வேறு இடங்களிலும் கோயில்களின் அழிவுகள் உள்ளன. மெம்பிஸ் நகர் கோவிலின் விக்கிரகங்களின் அழிவுபற்றி மிகச்சரியாக முன்னறிவிக்கப்பட்டிருக்கிறது.



மெம்பிஸ் முற்றிலும் அழிக்கப்படும்.

ஆராதிக்கப்பட்டவைகள் முற்றிலும் அழிக்கப்படும்.

துல்லியமான தெளிவான முன்னறிவிப்புகள்

## இ) எகிப்தின் வீழ்ச்சி



அநேக நூற்றாண்டுகளாக ஒரு வல்லரசாயிருந்துவந்த போதிலும் எகிப்து தாழ்ச்சியுறும் எனத் தெளிவாக முன்னறிவிக்கப்பட்டுள்ளது எசேக்கியேல் தீர்க்கதரிசி இத்தேசத்தைப் பற்றி.

''அது இனி ஜாதிகளின்மேல் தன்னை உயர்த்தாமல், மற்ற ராஜ்யங்களிலும் அற்பமானதாயிருக்கும். அவர்கள் இனி ஜாதிகளை ஆளாதபடிக்கு அவர்களைக் குறுகிப் போகப்பணணுவேன்." எசேக்கியேல் 29:15.

பல நூற்றாண்டு களாக பிற அரசுகள் எகிப்தின் மேல் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்திவருகின்றன.

எகிப்து அற்பமானதாயிருக்கும்.

இனி அது ஜாதிகளை ஆள்வதில்லை.

துல்லிபமான தெளிவான தீர்க்கதரிசனம்.